**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 22.07.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சி வாரச்சந்தை மேம்பாட்டுப் பணிக்கு இடையூறாக உள்ள மின்கம்பத்தினை அகற்ற மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் உதவி பொறியாளர், செங்கோட்டை அவர்களின் கடிதம் எண்:உ.மி.பொ/ந/செங், வ.ஆ/கோ.கட்டு/அ.எண் 148/22, நாள்:23.06.2022ல் மேற்படி மின்கம்பத்தினை அகற்றுவதற்கு மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.15330/– மின்வாரியத்திற்கு செலுத்தினால் இடையூறாக உள்ள மின்கம்பம் மாற்றியமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் : 96**

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

நமக்கு நாமே திட்டம் 2021–2022–ன் கீழ் செங்கோட்டை நூலகத்திற்கு கணிணி மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் ரூ.1.00 லட்சம் மதிப்பீட்டில் வினியோகம் செய்யும் பணி மேற்கொள்ள 17.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | அக்னி கம்ப்யூட்டர், தென்காசி | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | நியூ கம்ப்யூட்டர், தென்காசி | 7.20% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் அக்னி கம்ப்யூட்டர், தென்காசி நிறுவன ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர, அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று அக்னி கம்ப்யூட்டர் நிறுவனம், தென்காசிக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 97**

அக்னி கம்ப்யூட்டர் விலை விகிதத்திற்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு ஏப்ரல் 2021 மாதம் முதல் மார்ச் 2022 மாதம் வரை பெறப்பட்ட தினசரி நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமலர் மற்றும் தினத் தந்தி நாளிதழ்களுக்கு

கட்டணம் ரூ.8000/- நியூஸ் பேப்பர் ஏஜெண்ட் திரு.செல்வக் குமரன், செங்கோட்டை என்பவருக்கு வழங்கிடவும், மற்றும் ஏப்ரல் 2022 மாதம் முதல் மார்ச் 2023 மாதம் வரை தினசரி நாளிதழ்கள் அலுவலகத்திற்கு பெற்றிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ;902/2017/டி2)

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 98**

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>**மன்றப் பொருள் 04 :**</u>

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவகத்தின் 2021–22ம் ஆண்டிற்கான தொகை ரூ.534204/– ஆகும். அம்மா உணவக செலவு தொகை ரூ.1145307/– மேற்படி தொகைகள் உறுதி செய்யப்பட்ட தொகைகள் ஆகும். தற்போது 2022–2023ம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் உத்தேச செலவினம் ரூ.6,50,000/– ஆகும். அம்மா உணவகத்தில் அவ்வப்போது ஏற்படும் வரவினை விட கூடுதல் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மாற்றிக் கொண்டு செலவிடவும் வருவாய் நிதி கணக்கிலிருந்து நிதி மாற்றம் செய்து செலவுகள் மேற்கொள்ளவும் ஒட்டுமொத்த தொகை ரூ.6,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 99**

அனுமதி வழங்கப்பட்டது.

<u>**மன்றப் பொருள் 05 :**</u>

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனம் பேருந்து நிலைய அசைவு உணவு விடுதி கடையினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 08–07–2022ம் தேதி நடைபெற்ற மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு குத்தகைதாரர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்கப்பட்டது, ஏலக்கேள்வியானது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொது ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்கள் :**

| வ.எண் | குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.எம்.முகம்மது சலீம்<br>60A, அண்ணா தெரு,<br>செங்கோட்டை , மேலூர். | ரூ.7500/- |
| 2 | திரு.சி.அங்கராஜ்<br>த/பெ.செல்லசாமி<br>1/127 வீனஸ் தெரு<br>வல்லம், செங்கோட்டை | ரூ.7700/- |

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட குத்தகைதாரர்கள் :**

| வ.எண் | குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.சி.அங்கராஜ்<br>த/பெ.செல்லசாமி<br>1/127 வீனஸ் தெரு<br>வல்லம், செங்கோட்டை | ரூ.7400/- |

(ந.க.எண் : 3090/2015/அ2)

அலுவலகக் குறிப்பு :

1. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆகிய இரண்டிலும் கேட்கப்பட்ட ஏலக் கேள்விகளில் அதிகமான ஏலக்கேள்வி கோரிய திரு.சி.அங்கராஜ், த/பெ.செல்லசாமி, செங்கோட்டை என்பவரின் ஏலக்கேள்வி ரூ.7700/- தொகையினை மன்றம் அங்கீகரித்து ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று வருடங்களுக்கு மட்டும் பேருந்து நிலைய அசைவ உணவு விடுதி கடையினை அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 100**

திரு.சி.அங்கராஜ் அவர்களின் ஏலக் கேள்விக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 06 :**

செங்கோட்டை நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 26,823 ஆகும். மொத்த பரப்பளவு 2.68 ச.கி.மீ., மொத்த வீடுகளின் எண்ணிக்கை 9286 ஆகும். இந்நகராட்சி 1921 ஆம் ஆண்டு நகராட்சியாக இருந்து வந்தது. கேரள அரசிடமிருந்து பிரிந்து 2 ஆம் நிலை நகராட்சியாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் 26.355 கி.மீ. சாலைகள், 24.50 கி.மீ. மழை நீர் வடிகால் உள்ளன. 146 தெருக்கள் உள்ளன. தினசரி சேகரமாகும் குப்பைகள் 6.16 மெட்ரிக் டன் ஆகும். இந்நகராட்சியில் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் 14 நபர்கள் நிரந்தர பணியாளர்கள் ஆவர். நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட நிரந்தர தூய்மை பணியாளர்கள் 57ல் நாளது தேதி வரை காலியாக உள்ள பணியிடம் 43 ஆகும்.

திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000ன் படி திடக்கழிவுகள் முறையாக கையாளுதல் விதிகளின்படி வீடு வீடாக குப்பைகளை சேகரித்து முறையாக கையாளுதல் மற்றும் கலவை உரமாக்குதல் மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படுத்துதல் பணியினை மேற்கொள்ளவும் வாறுகால் துப்புரவு பணி மேற்கொள்ளவும் கீழ்க்கண்ட விபரப்படி பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

1. வீடு வீடாக கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரித்தல்.
2. மேற்படி வார்டு பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ கழிவு அல்லாத பிற கழிவுகளை பிரித்து சேகரித்தல்.
3. வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், வர்த்தக நிறுவனங்கள், வாரச்சந்தை சமுதாயக் கூடங்கள் இன்னும் பிற நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை பிரித்து சேகரித்தல்.

4. பிரித்து சேகரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை அன்றே நுண்உர மையத்திற்கு கொண்டு சென்று உரமாக்கும் பணி
5. வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளையும் பெருக்கி சுத்தல் செய்தல்.
6. கழிவு நீர் ஒடைகளை சுத்தம் செய்து சீராக கழிவு நீர் ஒடச் செய்து வாறுகால் கழிவுகளை அன்றே வளம் மீட்பு பூங்காவில் சேர்ப்பது.
7. பொது இடங்கள், மக்கள் கூடும் இடங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கும் பணி
8. பேருந்து நிலையம் பராமரித்தல்.

எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சீரிய முறையில் மேற்கொள்வதற்கு அரசாணை நிலை எண். 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.04.1997-ன் படி இந்நகராட்சிக்கு அளவுகோலின்படி 116 பணியாளர்கள் தேவை உள்ளது ஆனால் 14 பணியாளர்கள் மட்டுமே இந்நகராட்சியில் பணியில் உள்ளனர். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 36909-7/பி3/2015, நாள். 18.12.2015-ன்படி அனுமதி வழங்கப்பட்ட தின்கீழ் 01.11.2016 முதல் 31.10.2019 வரை மூன்றாண்டுகாலத்திற்கு 58 பணியாளர்கள் தனியார் ஒப்பந்தக்காரர் மூலமாக மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 31.10.2019-ல் முடிவடைவதால் வளர்ந்து வரும் செங்கோட்டை நகராட்சியில் சுகாதார நலனை முன்னிட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி இந்நகராட்சியில் ஏற்கனவே வெளிக்கொணர்வு மூலமாக தூய்மை பணியாளர்கள் வழங்கி வரும் ஏ.வி.எம்.நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் மறு ஒப்பந்தம் கோரும் வரையில் அன்னாருக்கு நபர் ஒருவருக்கு ரூ.220 மூலம் 44 நபர்களுக்கும் 14 நபர்கள் ரூ.339 வீதம் தனியார் ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது இந்நிலையில் பார்வை 5-ல் காணும் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சில்லரை செலவின ஊதியம் நபர் ஒன்றுக்கு ரூ.478/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபடியால் பழைய ஒப்பந்த விலைவிகிதத்தில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றபடியால் அடிக்கடி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர், எனவே இந்நகராட்சியில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு சில்லரை செலவின ஊதியம் ரூ.478/ வீதம் மற்றும் பணியாளர்கள் சேமநலநிதி/மருத்துவ காப்பீடு உபகரணங்கள் இவைகளுக்கான 10 விழுக்காடு ரூ.48 ஆக மொத்தம் ரூ.526 வீதம் 58 பணியாளர்களுக்கு ஏற்படும் மாதம் ஒன்றுக்கு செலவினம் ரூ.915240/-ம் மூன்று மாதங்களுக்கான நீடிப்பு தொகை ரூ2745720/-க்கு 2022-2023ஆம் ஆண்டிற்கு 3 மாதங்களுக்கு மட்டும் வெளிக்கொணர்வு முகமை மூலமாக தனியார் தூய்மை பணியாளர்கள் ஒப்பந்தத்தினை நீடிப்பு செய்து வழங்குவதற்கான முன்மொழிவு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மூன்று மாதங்களுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலமாக தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சில்லரை செலவின விகிதம் ரூ.478/- நிர்வாக செலவினம் 10 விழுக்காடு சேர்த்து ஆக மொத்தம் ரூ.526/- வீதம் மூன்று மாதத்திற்கான மொத்த செலவினத்தொகை ரூ2745720/-னை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 101**

மன்றத்தின் அலுவலக குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. தேவையான பணியாளர்கள் மட்டும் எடுக்க முடிவு செய்யப்பட்டது. அதிக பணியாளர்கள் அவசியம், அவசரம் கருதி தேர்வு செய்ய மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 07 :**

தூய்மை பாரத திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிப்பறை இல்லாத வீடுகளில், இடவசதி உள்ள 47 வீடுகளுக்கு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டம் IHHL திட்டத்தின் கீழ் மேற்காணும் 47 பயனாளிகளின் சொந்த விருப்பத்தின் பேரில் கழிவறை கட்டிக் கொள்ள விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு கழிப்பறை ஒன்றுக்கு ரூ.9332/- அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் கழிப்பறை ஒன்றுக்கு மத்திய அரசு மானியம் 4 சதவீதம் ரூ.4666/–, மாநில அரசு மானியம் 2 சதவீதம் ரூ.2333/– மற்றும் இந்நகராட்சிப் பங்குத் தொகை 2 சதவீதம் ரூ.2333/– செலவிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி 47 தனிநபர் கழிவறைகள் கட்டுவதற்கு ஆகும் செலவினத்திற்கான நகராட்சிப் பங்குத் தொகை (ரூ.2333 * 47 ) ரூ.1,09,651/- ஆகும், மேற்படித் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

(ந.க.எண் ;954/2021/எச்1)

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி பங்குத் தொகை ரூ.1,09,651/- செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 102**

அலுவலக குறிப்புக்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 08 :**

செங்கோட்டை நகராட்சியில் நடைபெறும் இணையதள ஒப்பந்தப் புள்ளிகள் பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் தொடர்பாக உபயோகப்படுத்தப்படும் Digital Signature Card இவ்வலுவலக பொறியாளர் மற்றும் கணக்கர் ஆகியோர் பெயரில் வாங்கிய வகைக்கு ரூ.8000/– Associated Accounts Private Ltd, தென்காசிக்கு வழங்க வேண்டியுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 103**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 09 :**

15வது நிதிக்குழு மானியம் 2021–22ன் கீழ் செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் மொத்தம் 50 எண்ணம் LED மின் விளக்குகள் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 104**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 10 :**

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட KC ரோட்டில் அமைந்துள்ள MCC-க்கு கிணற்றிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. தற்போது மேற்படி கிணற்றிலுள்ள மோட்டார் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி கிணற்றிலுள்ள

மோட்டார் பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 105**

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 11 :</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 11 வல்லம் ரோடு MCC-யிலுள்ள இயந்திரத்தின் பெட்போல்ட் உடைந்துள்ளது. இதனால் மக்கும் குப்பைகளை அரைக்க இயலாத நிலையில், அவற்றை மார்கெட் ரோடு மற்றும் கொட்டாரம் ரோட்டில் உள்ள MCC-க்கு அனுப்பப்பட்டு குப்பை அரைக்கப்படுகிறது. எனவே மேற்படி வல்லம் ரோடு MCC-யிலுள்ள இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்யவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 106**

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 12 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான முத்துசாமி பூங்கா மேம்பாட்டுப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பினை தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.25156/– Nidus Advertising Marketing Pvt Ltd -க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பர கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 107**

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 13 :</u>**

பணியாளர் வருங்கால வைப்பு நிதி தொடர்பாக EPF Appellate Tribunal, Chennai-ல் உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர் மற்றும் Recovery Officer, திருநெல்வேலி ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு EPF (A) No.42/2022-ற்கு 06.07.2022 அன்று hearing நடைபெற்றது. மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி ஆணையாளர் சார்பில் வாதாடிய வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– திரு.M.பாண்டியராஜன் வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 108**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 14 :**

செங்கோட்டை நகராட்சியின் அம்மா உணவக பணியாளர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கான மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் EPF தொகைகள் செலுத்துவதற்கான Return Fees மார்ச் 2022 முதல் ஜீன் 2022 வரை (4 மாதங்களுக்கு) மாதம் 1ற்கு ரூ.3500/– வீதம் மொத்தம் ரூ.14000/– JJS Consultancy, Sivakasi–க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மன்றக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 109**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள் 15 :**

செங்கோட்டை நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் பின் வரும் பணியினை மேற்கொள்ள 18.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி சிறு மின் விசை பம்புகளுடைய ஆழ்துளை குழாய் கிணறுகளில் மண் சரிவு மற்றும் வேர்பிடிப்பு ஏற்பட்டு பழுதான மின் மோட்டாரை வெளியே தூக்குவதற்கு முடியாமல் உள்ளதை Lift Maker இயந்திரம் கொண்டு வெளியேற்றுதல் | 1.60 | 1) திரு.M.அசன்கனி மதிப்பீட்டு விகிதம் |
| | | | 2) திரு.டி.ஆபேல் ஜெயசீலன் மதிப்பீட்டை விட 0.33% அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.அசன்கனி என்பவரால் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 110**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 16 :**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலக கடிதம் ந.க.எண் 1540/2015/ஆ2 நாள் 23–05–2022ன் படி செங்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் உள்ள 24 வார்டுகளில் நாள் ஒன்றுக்கு 6.16 மெட்ரிக் டன் குப்பைகள் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரம் செய்யப்படுகிறது. அவற்றில் 3.81 மெட்ரிக்டன் மக்கும் குப்பைகள் இந்நகராட்சி பகுதியில் மூன்று இடத்தில் ( (1) கொட்டாரம் ரோடு, (2) கே.சி

ரோடு, (3) வல்லம் ரோடு )அமைந்துள்ள MCC (நுண் உர செயலாக்க மையம்) அரைக்கப்பட்டு உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு MCCயிலும் வெள்ளைப் பலகை மற்றும் சுவரில் MCCக்கு உட்பட்ட வார்டுகள், சேகரம் செய்யப்படும் குப்பையின் அளவு மொத்த கழிவுகள், மொத்த மக்கள் தொகை உர அளவு போன்றவை பெயிண்டால் எழுதப்பட வேண்டும் என்பதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று 7*4 அளவு Sticker Board Ply Wood கொள்முதல் செய்து நிறுவப்பட்டமைக்கு பணிகள் முடித்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கும், குறைவான விலைப்புள்ளி வழங்கிய தமிழன் ஸ்டிக்கர்ஸ், பிரானூர் பார்டர், செங்கோட்டை என்பவருக்கு ஒரு பலகைக்கு ரூ.4900 வீதம் மூன்று பலகைகளுக்கு ரூ.14,700 வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கிடவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ஒரு பலகைக்கு |
|---|---|---|
| 1 | தமிழன் ஸ்டிக்கர்ஸ்,<br>53, குற்றாலம் மெயின் ரோடு,<br>பிரானூர் பார்டர், செங்கோட்டை | ரூ.4900/- |
| 2 | ரோமன் ஸ்டிக்கர்ஸ்,<br>140, மதுரை மெயின் ரோடு,<br>தென்காசி | ரூ.5200/- |

அலுவலகக் குறிப்பு ;

1. அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பலகை கொள்முதல் செய்தமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.
2. செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 111**

அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி